//மிக மிக அவசரம்//தனி கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3451/ஆ5/2024, நாள். /08/2024

.....

பொருள் பள்ளிக் கல்வி – 2024-2025ம் கல்வியாண்டுக்கான – இலக்கிய மன்ற செயல்பாடுகள் செயல்படுத்துதல் – பள்ளி அளவில், வட்டார, மற்றும் மாவட்ட அளவிலான நிகழ்வுகள் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் கடித ந.க.எண்.019528/எம் /இ1/2024, நாள். 20.08.2023

.....

பார்வையில் காணும் சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி, பள்ளி அளவிலான மன்ற செயல்பாடுகள் மற்றும் போட்டிகள் 1 முதல் 9 வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு கல்வி ஆண்டு நாட்காட்டியில் மன்ற செயல்பாடுகளுக்கான ஒதுக்கப்பட்ட பாடவேளைக்கு ஏற்ப ஏப்ரல் -2025 வரை பள்ளி அளவிலான செயல்பாடுகள் வாராந்திர அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். இம்மன்ற செயல்பாடுகளை ஒவ்வொரு வாரமும் ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர் தலைமையில் திட்டமிட்டு அனைத்து வகுப்பு பிரிவுகளும் விடுபடுதல் இன்றி பாடத்திற்கு ஏற்பவும் செயல்பாடுகளுக்கு ஏற்பவும் பொறுப்புகள் பிரித்து வழங்கப்பட வேண்டும்.

| வாரம் | மன்ற செயல்பாடுகள் |
|---|---|
| வாரம் 1 | இலக்கிய செயல்பாடுகள்: நூலக பாட வேளையில் படித்த நூல்களின் அடிப்படையில் வகுப்பில் எழுதுதல் / பேசுதல் |
| வாரம் 2 | வினாடி வினா செயல்பாடுகள்: தினசரி நாளிதழ் மற்றும் இதழ்களின் கருப்பொருட்களை பற்றி மாணவர்கள் விவாதித்து வினாடி வினா செயல்பாடுகள் குறித்து மேற்கொள்வது. |
| வாரம் 3 | திரைப்படங்களை வெளியிடல் |
| வாரம் 4 | பள்ளியில் நடக்கும் மன்ற செயல்பாடுகளில் சுற்றுச்சூழல் மன்றம் கலை மற்றும் விளையாட்டு செயல்பாடுகளும் அடங்கும் |

ஆறு முதல் ஒன்பது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு தனிச்சிறப்பாக இந்த போட்டிகள் நடத்தப்படும் குறிப்பிட்ட மன்ற பொறுப்பாளர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் வெற்றியாளர்களை தேர்ந்தெடுக்கும் போது பாலின சமத்துவத்தோடு இருப்பதை உறுதி செய்து அட்டவணை 1ல் குறிப்பிட்டுள்ளதைப் போல பள்ளி, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை விவரங்களை குறிப்பிட வேண்டும். இம்மன்ற செயல்பாடுகள் மற்றும் போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு மன்ற பொறுப்பாளர்களும், தலைமை ஆசிரியரும் பொறுப்பேற்க வேண்டும். பள்ளி அளவில் மன்ற செயல்பாடுகள் மற்றும் போட்டிகள் நடைபெறுவதை தலைமை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும்.

கல்வி கால அட்டவணையின் படி மன்ற செயல்பாடுகள் அனைத்தும் தொடரும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மாணவர்களுக்காக வகுப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய மன்றச்செயல்பாடுகள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**வட்டார அளவிலான போட்டிகள்:**

பள்ளி அளவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், வட்டார அளவில் பங்கு பெற தகுதியானவர்கள். அட்டவணை 1ல் குறிப்பிட்டுள்ளவாறு வட்டார அளவிலான போட்டிகள் நடத்தப்படும். மன்ற பொறுப்பாசிரியர்கள் பள்ளி அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் வட்டார அளவில் பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும்.

**மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள்:**

வட்டார அளவிலான போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள், மாவட்ட அளவிலும் மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள், மாநில அளவிலும் பங்கேற்பார்கள். இந்தப் போட்டிகள் பற்றிய விவரங்கள் இணைப்பில் குறிப்பிடப்படும். வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் கருப்பொருட்கள் அடுத்தடுத்த நடவடிக்கைகளாக வெளியிடப்பட்டவுன் பின்னர் தெரிவிக்கப்படும். எனவே பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள்ள அறிவுரைகளை பின்பற்றி பள்ளி அளவில் மாதந்தோறும் போட்டிகள் நடத்த தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையில் காணும் கடித நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி)
வேலூர் மாவட்டம்.
நகல்–

1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. அனைத்து அரசு நடுநிலை, உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)